RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt224100

# அரவிந்தன் படைப்புகளில் சமுதாயப் பிரச்சனைகள்

ஜா. ஆஷா ஷெர்லி [அ, *], த. மகிலா ஜெனி [அ]

[அ] தமிழ்த்துறை, இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர்-629802, கன்னியாகுமரி மாவட்டம். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி-627012, தமிழ்நாடு

# Social issues in Aravind's Works

G. Asha Sherly [a, *], D. Mahila Jeni [a]

[a] Research Centre of Tamil, Lekshmipuram College of Arts and Science, Neyyoor-629802, Kanyakumari District. Manonmaniam Sundaranar University, Tirunelveli-627012, Tamil Nadu, India

* Corresponding Author: ashashe@gmail.com

Received: 30-05-2022
Revised: 11-09-2022
Accepted: 02-10-2022
Published: 09-10-2022

Check for updates

## ABSTRACT

Literature has the characteristic of reflecting the real events of human life in a detailed and detailed manner. Literature is born with the feelings and realities of society. Society is a group or gathering of people belonging to a particular race, sector, or profession who live in various types of relationships. Society refers to a specific group of people. All the values in society are called social values. There are people of different religions and castes in society. Literature is created with the feelings that all of them should live in harmony with human feelings. The first phase of the study included reading Aravind's works Vanaprastha and A Noise is Heard Outside the Bathroom. Finally, the short story collection Once and the novel Ponnagaram were read. A study was conducted to identify and address social issues found in Aravind's works. The identified issues were enriched and explained with references from other books. All of the information in this article refers to issues that are still ongoing today.

**Keywords:** Aravind's works, Human Feelings, Social Issues, Social Values

## முன்னுரை

மனித வாழ்க்கையின் எதார்த்த நிகழ்வுகளை விளக்கமாகவும் விரிவாகவும் பிரதிபலிக்கிற பண்பு இலக்கியத்திற்கு உண்டு. சமுதாயத்தின் உணர்வுகளோடும் உண்மைகளோடும் இலக்கியம் பிறக்கிறது. சமுதாயம் என்பது பல்வேறு வகைகளில் உறவு கொண்டு வாழும் ஒரு குறிப்பிட்ட இனம், துறை, தொழில் சார்ந்தவர்களின் தொகுதி அல்லது கூட்டம் ஆகும். சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவைக் குறிக்கும். சமூகத்தில் உள்ள அனைத்து மதிப்பீடுகளுமே சமூக விழுமியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. சமூகத்தில் பல்வேறு மதத்தினரும் சாதியினரும் உள்ளனர். அவர்கள் அனைவரும் மனித உணர்வோடு ஒற்றுமையாய் வாழ வேண்டும் என்ற உணர்வுகளோடு இலக்கியம் படைக்கப்படுகிறது.

## சமுதாயம்

தனித்து வாழ்ந்த மனிதன் கூட்டமாக வாழத் தொடங்கிய அமைப்பே சமுதாயம். மக்கள் ஒன்று சேர்ந்து வாழ்வதை மட்டும் குறிப்பதன்று. ஓர் ஒழுங்கின் அடிப்படையில் சேர்ந்து வாழ்வது தான் சமுதாயம் ஆகும். 'ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து

வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமுதாயம். குழுவாக கூடி வாழும் மக்கள் கூட்டமே சமுதாயம்" (Nalini Devi, 1991) என்கிறார்.

உறுப்புகள் பல சேர்ந்து உடல் ஆகுதல் போல மக்கள் பலர் சேர்ந்து உருவாகுவதே சமுதாயமாகும். மக்கள் கூட்டமாகச் சேர்ந்து நிலையாக ஓரிடத்தில் வாழத் தொடங்கிய போது சமுதாய அமைப்பு உருவானது. 'சமுதாயம் என்பது கால ஓட்டத்தின் ஒரு கட்டத்தையும் மானிட வாழ்க்கையின் ஒருபடி நிலையையும் உள்ளடக்கிய ஒரு வரலாற்றுக் கூற்று. தனிமரம் தோப்பாகாது. மரங்கள் மொத்தமாக இருந்தால் தான் அதனைத் தோப்பு எனலாம். இது போலத் தனிமனிதர்கள் சேர்ந்து கூட்டமாக வாழ்வதேச் சமுதாயம்" (Gurusamy, 1986) என்கிறார்.

மனிதனை விலங்கிலிருந்து பிரிப்பதே சமுதாயம் ஆகும். 'தனிமனிதனாக இருக்கும் ஒருவன் சமுதாயப் பழக்க வழக்கங்களை ஏற்றுக் கொள்ளும் போது அம்மனிதர்களின் கூட்டுத் தொகுப்பு 'சமூகம்' என்று அழைக்கப்படுகிறது." (Jegatheesan, 2008)

## அரவிந்தன் படைப்புகளில் சமுதாயம்

கல்வி, அரசியல், குடிப்பழக்கம், புகைப்பழக்கம், கள்ளக் காதல், வரதட்சணை, காதல் முதலானவை அரவிந்தன் படைப்புகளில் இடம்பெற்றுள்ளன.

## கல்வி

கல்வி மனிதனை நாகரீகம் உடையவனாக மாற்றுகிறது. 'வாழ்க்கைக்காகக் கல்வி வாழ்க்கையின் வாயிலாகக் கல்வி வாழ்க்கை முழுவதும் கல்வி" (Gurusamy, 1996) என கோட்பாட்டின் அடிப்படையில் கல்வியை உருவாக்க குருசாமி அவர்கள் விரும்பினார். 'இன்றைய காலத்தில் பெண்கள் ஆடை, அணிகலன்கள் மேல் மோகம் கொண்டு தங்கள் தகுதியை இழிவுப்படுத்திக் கொள்கிறார்கள். மேலும் இப்பொருள்களின் மேல் உள்ள மோகத்தை மாற்றிக் கல்வியில் கருத்தைச் செலுத்த வேண்டும்." (Aranga Mallika, 2008) கல்லாமையால் அறியாமை இருளில் சிக்கித் தவிக்கும் இளைஞர்களை நோக்கி மனம் தேவையற்ற செயல்களில் பிறழாமல் இருக்க வேண்டுமெனில் அனைவருக்கும் கல்வி அறிவினை அளிக்கும் நல்லோரைத் தினமும் தேடிச் சென்று கற்க வேண்டும். மனிதர்கள் உயிர் வாழ்வதற்கு நீர், உணவு, காற்று எவ்வளவு அவசியமோ அதே போன்று அறிவை வளர்ப்பதற்குக் கல்வி மிகவும் அவசியமாக உள்ளது.

## கல்வியில் கவனம் செலுத்தாமை

பள்ளியில் படிக்கும் மாணவர்கள் படிப்பதில் ஆர்வம் செலுத்துவதில்லை. விளையாட்டு மற்றும் தொலைக் காட்சிகளில் ஆர்வம் கொள்கின்றனர். 'சுதாவும் புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு பேசாமல் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தாள்." (Aravindan, 2001) "முத்து சரியாகப் படிக்காமல் கோலி, பம்பரம், சூதாட்டம் என்று காலத்தைத் தள்ளிக் கொண்டிருந்தான்." (Aravindan, 2015)

## மூன்று வயதில் பள்ளிக்கு அனுப்புதல்

பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்வதால் சிறு வயதிலேயே குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர். ஓடி, ஆடி விளையாடும் வயதில் குழந்தை வகுப்பறைக்குள்ளே முடங்கி விடுகிறது. "போய் ட்ரெஸ் மாட்டுண்டு களம்பு. வேன் வந்துடும்" (Aravindan, 2001) என்று அம்மா சொல்லிக் கொண்டிருந்தாள்.

## கல்வி கற்றுக் கொண்டு வேலை பார்த்தல்

ஆனந்த் என்ற வாலிபன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். கல்லூரி போக மற்ற நேரங்களில் தன் அண்ணனின் கடையில் தான் இருப்பான். ராகவன் அண்ணனிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினான். "பரீட்சைக்கு ஹால் டிக்கெட் வாங்க வேண்டியிருந்தது." (Aravindan, 2001).

## கல்வியில் பின்தங்கிய நிலை

முத்துச்சாமிக்கு சிறுவயது முதலே படிப்பு சரியாக வரவில்லை. 'ஆறு வயதிலிருந்தே அவன் வீட்டுக்குச் சம்பளமில்லாத வேலைக்காரனாகி விட்டான். திட்டும் குட்டும் வாங்கியே வளர்ந்தான். ஏதோ ஒப்புக்குப் பள்ளிக்கூடம் போவான். தட்டுத்தடுமாறி பத்தாவது முடிப்பதற்குள் அவனுக்கு இருபது வயது ஆகியிருந்தது." (Aravindan, 2001) ஜகதாலன் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவன். இவனுக்குப் படிப்பை விட கபடி விளையாட்டு தான் மிகவும் பிடிக்கும். "அவனால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. பத்தாம் வகுப்பில் பெயில் ஆனான்." (Aravindan, 2015) என்பதிலிருந்து கல்வியில் பின் தங்கிய நிலையை அறிய முடிகிறது.

## அரசியல்

அரசியல் என்பது மக்களை வழிநடத்தும் குழு அல்லது அமைப்பு எனலாம். 'மனித வாழ்வை இயக்கும் ஆற்றல்களுள் அரசியலும் முக்கியமான ஒன்று" (Jai Jeeva, 2004) 'ஒரு குழுவானது சக்தியின் அடிப்படையில் தன்னை வழிநடத்த அமைத்துக் கொள்ளும் முறையே அரசியல். மனித குழுக்களிடையே உள்ள சக்தி, அதனைப் பெறும் விதம், பயன்படுத்தும் விதம், பகிர்ந்து கொள்ளும் விதம் போன்றவற்றை உள்ளடக்கியது அரசியல்" (Raj, 2001) எனலாம்.

## அரசியல்வாதிகளின் தன்மை

அரசியல்வாதிகள் அவரவர் வேலைகளுக்காகவே மக்களை பயன்படுத்துகின்றனர். "மக்களிடம் இருக்கும் ஒருமைப் பாட்டுணர்வு அரசியல் நடத்தும் அரசியல்வாதிகளிடம் சிறிதளவு கூட இல்லை." (Kali Krishnan, 2019) தேர்தல் நடக்கும் முன்பு மக்களிடம் உங்களுக்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றன அனைத்தையும் பூர்த்தி செய்வதாகக் கூறி வாக்கு சேகரிக்கின்றனர். தேர்தல் முடிந்த பின்பு அவர்களை அடையாளம் காணவே முடிவதில்லை. திட்டங்களையெல்லாம் மக்களுக்காகத் தீட்டி பணக்கட்டுகளை எல்லாம் தங்கள் பைகளுக்குள்ளே பதுக்குகின்றனர். "ஆட்சியில் இருப்பவர்களுக்கு அக்கறை இருந்தால் தானே அவர்களுக்கு எப்படியாவது தண்ணீர், மின்சாரம் எல்லாம் தடையின்றிக் கிடைத்து விடும். அக்கறை இருந்தால் இதை செய்ய முடியாமல் போகுமா?" (Aravindan, 2001) ஆட்சியைப் பிடிப்பது வரை மக்களை ஏமாற்றுவார்கள். ஆட்சியில் அமர்ந்த பிறகு தங்கள் வருமானத்தைப் பெருக்குவதிலே தங்கள் முழு கவனத்தையும் செலுத்துவார்கள்.

## கட்சி மாநாடு நடத்துதல்

வெளியூரில் கட்சி மாநாடு நடந்து கொண்டிருந்தது. மாநாட்டுப் பந்தல் அமைந்திருந்த திடல் மிகவும் பெரியது. "தலைவரின் பேச்சை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். தொண்டர்களுக்கு மட்டுமேயான அமர்வு அது" (Aravindan, 2006) அரசியல்வாதிகள் தங்கள் கட்சிகளில் ஆட்களைச் சேர்ப்பதற்காக ஆங்காங்கு கட்சி மாநாடுகளை நடத்தினர்.

## குடிப்பழக்கம்

குடிப்பழக்கம் என்பது சமூகத்தை, பொருளாதாரத்தை அழிக்கக் கூடிய காரணிகளில் ஒன்றாகும். குடி கலாச்சாரம் திரைப்படங்கள் வாயிலாக ஊட்டி வளர்க்கப்படுகிறது. இந்தப் பழக்கம் இன்றைய இளைஞர்கள் மத்தியில் மிக வேகமாக பரவி வருகிறது. குடிகாரன் பேச்சு பொழுது விடிந்தால் போச்சு என்பார்கள். ஆவுடையப்பனின் மனைவியான "செண்பகத்திற்கு இவர் குடிப்பதும் பிடிக்காது. குடித்திருக்கும் போது கிட்டே நெருங்க விடமாட்டாள்." (Aravindan, 2006) முத்து தினமும் குடிப்பான். பார்வதி எத்தனை முறை முத்துவிடம் கூறியும் நிறுத்தவில்லை. சாராயம் குடித்தால் தான் இரவில் தூக்கம் வருகிறது என்று கூறி சமாளித்து விடுவான். "இரவில் முத்து வழக்கம் போலக் குடித்து விட்டு வந்து பார்வதியைக் கட்டியணைத்துப் படுத்துக் கொண்டான்." (Aravindan, 2015)

## புகைப்பிடிக்கும் பழக்கம்

புகைப்பிடிப்பது கேடு என தெரிந்தும் புகைப்பழக்கத்திற்கு மனிதன் அடிமையாகின்றான். புகைப்பிடித்தால் சுவாச புற்றுநோய் வரும் என தெரிந்தும் தொடர்ந்து புகைப்பிடித்து வருகின்றனர். புகைப்பிடிப்பதால் தான் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் தன்னைச் சுற்றியிருப்பவர்களும் பாதிக்கப்படுகின்றனர். முருகராஜின் அப்பா கடை முதலாளி. கடையில் அமர்ந்து புகைப் பிடிக்கிறார். 'அப்பா இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு புத்தகத்தில் மூழ்கினார்." (Aravindan, 2001)

## கள்ளக்காதல்

பெண்கள் தங்கள் கணவனைத் தவிர பிற ஆண்களிடம் நெருக்கமான உறவு வைத்திருப்பது தவறான செயல் ஆகும். இத்தகைய பழக்கம் இன்றைய சமுதாயத்தைச் சீரழிக்கும் செயல்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. 'பிற ஆண்களின் மனைவிமார்களைக் காம ஆசையுடன் பார்க்கக் கூடாது" (Soundhara Pandian, 2014) என்கிறார். ஆயினும் இன்றைய காலகட்டங்களில் பல ஆண்களும் பெண்களும் இத்தகைய தவறுகளையே செய்கின்றனர். ஆவுடையப்பன் தன் மனைவியை மறந்து இருபது வயதான ஒரு பெண்ணுடன் நகரில் பல பகுதிகளில் சுற்றித் திரிந்தான். உணவகங்களில் சாப்பிட்டார்கள். பணத்தை நிறைய செலவு செய்கிறான். காலியான திரையரங்குகளை நாடிச் செல்கிறார்கள். "இரவில் ஒரு வீட்டை தஞ்சமடைகிறார்கள். (Aravindan, 2006) ஆவுடையப்பனின் மாமா "அறுபது வயதில் புத்தம் புதியதாக ஒரு வைப்பாட்டியைப் பிடித்த கதை ஊருக்கே தெரியும்." (Aravindan, 2006)

## வரதட்சணை

இந்தியப் பெண்களைப் பாதிக்கும் ஒரு பிரச்சனை வரதட்சணை ஆகும். 'வரதட்சணை என்ற வார்த்தையானது பெண்களை, பெற்றவர்களுடைய மனதை ஒரு கலக்கு கலக்க வல்லதாயும் ஒரு குடும்பத்தைச் சிதற அடிக்கக் கூடிய மகிமையுடையதாயும் இருக்கிறது." (Prema, 2008) அரசால் பல வழிகளில் வரதட்சணை பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு கொடுக்கப்படுகிறது. ஆயினும் கேட்பதோடு நிறுத்தி விட்டு வாழ்வில் செயல்படுத்துவதில்லை.

## வரதட்சணைக்காக மனைவியைத் துன்புறுத்துதல்

கவிதா தன் அம்மா வீட்டிற்கு வந்திருந்தாள். அம்மா கோபாலிடம் இரவு தங்கை வந்திருப்பதாகக் கூறினார். "கலர் டி.வி. வாங்கிக் கொண்டு வா என்று அடித்துத் துரத்தும் ஜாதி இல்லை. ஆனால் உன் பிறந்த வீட்டிலிருந்து எனக்கு வேண்டியது எனக்குக் கிடைக்காத பட்சத்தில்

நம்மிருவருக்குமிடையே சமூக உறவு என்பதைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது என்பதை நாசூக்காக, மறைமுகமாகப் பல விதங்களில் உணர்த்தி விடுவார். (Aravindan, 2001) எப்பொழுதெல்லாம் கவிதாவுக்கும் கணவருக்கு மிடையே போர் ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் கவிதா தன் அம்மா வீட்டிற்கு வந்து விடுவாள்.

## காதல்

தமிழர் காதலை அன்பின் ஐந்திணை என்றனர். இஃது ஒருவனும் ஒருத்தியும் கொண்ட உளமொத்தத் தூயக் காதல் வாழ்க்கையாகும். இக்காதல் அறத்திலிருந்து மாறுபடாமல் அன்பின் வெளிப்பாடாக அமையும். பண்டைய காலங்களிலும் மனிதர்களிடையே காதல் காணப்பட்டது. தலைவி மீது காதல் கொண்ட தலைவர் தோழியைத் தூதாக அனுப்புவான். அத்தகைய காதல் காலம் காலமாக வளர்ந்து தற்போதும் காணப்படுகின்றது. ஹயக்ரீவன் தன் நண்பனின் தங்கை ஸ்ரீமதியைக் காதலித்தான். அவளைப் பார்ப்பதற்காகவே அடிக்கடி தன் நண்பன் வீட்டிற்குச் செல்வான். "ஏதாவது சாக்கு வைத்து ஸ்ரீவத்ஸன் வீட்டுக்குப் போவேன். சில சமயம் அவளுடன் பேச வாய்ப்பு கிடைத்தது." (Aravindan, 2016) ஆனால் இறுதிவரை தன்னுடைய காதலை ஹயக்ரீவன் ஸ்ரீமதியிடம் சொல்லவில்லை. இது ஒருதலைக் காதலாக இருந்தது.

## முடிவுரை

மக்கள் சேர்ந்த கூட்டமைப்பு குடும்பம். அதுபோல் பல குடும்பங்கள் சேர்ந்து இருப்பது சமுதாயமாகும். இத்தகைய சமுதாயத்தில் மக்களுக்குப் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. ஆயினும் அந்தப் பிரச்சனைகளை எதிர்கொண்டு சமாளித்து சமுதாயத்தில் வாழ்ந்து வருகின்றனர். சமுதாயத்தில் நடைபெறும் பிரச்சனைகளான கல்வி, அரசியல், குடிப்பழக்கம், புகைப்பழக்கம், கள்ளக்காதல் வரதட்சணை போன்றவை அரவிந்தன் படைப்புகளில் இடம்பெற்றுள்ளது.

## References


Arangam Mallika, (2008), Feminism in Tamil Poetry, New Century Bookhouse (P) Lit, Chennai.

Aravindan, (2001), Vanaprastha, Kalachuvadu Publishing House, 669 K.P. Road, Nagercoil.

Aravindan, (2006), Hearing noises outside the bathroom, Kalachuvadu Publishing House, Nagercoil.

Aravindan, (2015), Ponnagaram, Aravindan, (2004), Kalachuvadu Publishing House, 669 K.P. Road, Nagercoil.

Aravindan, (2016), One Last Time, Kalachuvadu Publishing House, Nagercoil.

Gurusamy, M.P. (1986), Our Social Disorders, Sri Ayyanar Printers, Chennai, India

Gurusamy, M.P. (1996), Gandhian Thoughts, Literary Society Publication, Madurai.

I. Prema, (2008), Women's Liberation and Women's Rights, Arivu Publishing House, Chennai.

Jagatheesan, A. (2008), Human Rights Principles in Literature, Thamarai Publications (P) Ltd., Chennai.

Jai Jeeva, A. (2004), A Study of Kumari Aadhavan's Poems, Laboratory, Tamil Studies, South Thiruvananthapuram Hindu College, Nagercoil - 2.

Kalikrishnan, C. (2019) Humanity in the Works of Kumari Aadhavan, Manonmaniam Sundaranar University, Tirunelveli.

Nalini Devi, (1991), Social Change in the Novels of Rajam Krishnan, Manivasagar Publishing House, Chennai.

Soundara Pandian, Su, (2014), Tamil and Society, Poongavanam, Isaiyanur.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License